## நெற் பயிரினை தாக்கும் எரிபந்தம் நோயினை முகாமை செய்தல்

**அறிமுகம்**



நெற்பயிரினை தாக்கும் பிரதான பங்கசு நோய் எரிபந்தம் ஆகும். இந் நோயானது நெற் பயிர்களின் விளைச்சலின் அளவு மற்றும் தரத்தினையும் குறைக்கின்றது. இதன் மூலம் நெற் செய்கையாளர்களின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இந் நோய் தாக்கமானது யாழ் குடாநாட்டில் சென்ற காலபோகத்தில் ஆட்டக்காரி என்ற நெல் வரக்கத்தில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தியது. தற்போது காணப்படும் காலநிலையானது இந் நோய் ஏற்படுவதற்கு சாதகமாக காணப்படுகின்றது.

இது நெற் பயிரின் எந்தப்பருவத்திலும் தொற்றக் கூடிய பங்கசு நோயாகும். பைரிகுளேரியேகிறைசியே***(Pyriculariagrisea)*** என்ற பங்கசுவினால் இந் நோய்த் தொற்று ஏற்படுகின்றது. மப்பும் மந்தாரமான மழையுடன் கூடிய குளிர்மையான காலநிலை நிலவும் போது நாற்றுப் பருவத்திலிருந்து நெல்மணி முற்றும் வரையான காலப்பகுதி வரை இந்நோய் தொற்று ஏற்படும். அதாவது நெற்பயிரின் வேர் பகுதி தவிர்ந்த, இலை, தண்டு, கதிர், மணிகள் ஆகிய பாகங்களில் கூடுதலான பாதிப்பை ஏற்படுத்தும். இந்நோயின் தாக்கத்தினை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**நோய் அறிகுறி**

**இலைகளில் :**



இலைகளின் மேற்பரப்பில் டைமன் வடிவத்தினை ஒத்த நரை நிறமான புள்ளிகள் பரவலாக காணப்படும். இப் புள்ளியின் மத்திய பகுதி அகன்றதாகவும் முனையின் இரு பகுதிகளும் ஒடுங்கியதாகவும் காணப்படும் மத்திய பகுதியில் நரை நிறமான தெளிவான வீக்கம் காணப்படும் இப் புள்ளிகள் விரிவடைந்து இலைகள் எரிந்தது போன்ற தோற்றத்தினைக் கொடுப்பதனால் எரிபந்த நோய் என்று அழைக்கப்படுகின்றது.

**தண்டில் :**



கணுக்கள் மற்றும் இலை மடல் சோணைகளில் கறுப்பு நிறமான புள்ளிகள் உருவாகி அழுகல் அடைந்து முறிவடையும்.

**நெற்கதிர்களில் :**



கதிரின் கழுத்துபகுதியில் தொற்றுஏற்பட்டு கழுத்துபகுதி முறிவடையும் இதனை கழுத்தழுகல் **(Neck rot)** என அழைப்பர். இதனால் கதிரிற்கு போசணைப் பதார்த்தங்கள் கொண்டு செல்லல் தடைப்பட்டு நெல் மணிகள் பதராக உருவாகும்.

**இந்நோயை கட்டுப்படுத்தும் முறை**

1. நெல் வயலில் சீரான பயிரடர்த்தியை பேணல்.
2. ஒரே நேரத்தில் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தல்.
3. விதைப்பதற்கு முன்னர் றைசைகிளசோல் [Kuru] இனைப்பயன்படுத்தி விதைப்பரிகரணம் மேற்கொள்ளல்[1kg விதை நெல்லிற்கு 2.5g Trcyclazole]
4. பயிரிற்கு நைதரசன் பசளையை சிபார்சுக்கு அமைவாக இடல்.

| பசளை | ஒருபரப்பிற்கானபசளையளவு (கிலோகிராம்) | | |
|---|---|---|---|
| யூரியா | முளைத்து 2 கிழமைகளின் பின்-450 கிராம் | முளைத்து 4 கிழமைகளின் பின்-1350 கிராம் | முளைத்து 7 கிழமைகளின் பின்-950 கிராம் |
| பொசுபேற்று(TSP) | 580 கிராம் (அடிக்கட்டு) | | |
| பொட்டாசியம் (MOP) | முளைத்து 4 கிழமைகளின் பின்-375 கிராம் | முளைத்து 7 கிழமைகளின் பின்-375 கிராம் | |

| பசளை | ஒருஏக்கரிற்கானபசளையளவு (கிலோகிராம்) | | |
|---|---|---|---|
| யூரியா | முளைத்து 2 கிழமைகளின் பின்-10.8 கிலோகிராம் | முளைத்து 4 கிழமைகளின் பின்- 32.4 கிலோகிராம் | முளைத்து 7 கிழமைகளின் பின்- 22.8 கிலோகிராம் |
| பொசுபேற்று(TSP) | 13.92 கிலோகிராம் (அடிக்கட்டு) | | |
| பொட்டாசியம் (MOP) | முளைத்து 4 கிழமைகளின் பின்- 9 கிலோகிராம் | முளைத்து 7 கிழமைகளின் பின்- 9 கிலோகிராம் | |

5. ஆட்டக்காரி வர்க்க நெல் இனத்தினை பயிரிடுவதைத் தவிர்த்தல்.
6. Bg 300 Bg 304 Bg 352 Bg 357 Bg 359-2 Bg 403 போன்ற எதிர்ப்பின வர்க்க நெல்லினங்களை பயிரிடல்.
7. சிபார்சு செய்யப்பட்ட பின்வரும் பங்கசு நாசினிகளில் ஏதாவது ஒன்றை பயிரிற்கு விசிறல்.

| இரசாயனத்தின் பெயர் | வர்த்தகப்பெயர் | தேவையானஅளவு 01 ஏக்கருக்கு | 10 லீற்றர் நீருடன் கலக்கவேண்டிய இரசாயனத்தின் அளவு |
|---|---|---|---|
| காபன்டசீம் 500g/1SC | சீஜீ காபன்டசிம்,ஹேலீஸ் காபன்டசிம்,பென்சோர் | 120ml | 15ml |
| எடிபென்பொஸ் 300g/1EC | ஹினோசான் EC 30 | 400ml | 25ml |
| கசுகாமைசின் 20g/1SL | கசுமின் | 240ml | 15ml |
| ரெபுகொனசோல் 250g/1EW | பொலிகர் | 100ml | 100ml |
| ஐசோபுறோதியோலன் 400g/1EC | பியுஜி-வன் | 200ml | 12.5ml |
| ட்றைசைகிளசோல் 75%WP | குரு | 160g | 2.5g/1kg seeds |

**மாகாணப் பணிப்பாளர்**

**மாகாண விவசாயத் திணைக்களம்**

**வடக்கு மாகாணம்**